செ.வெ.எண்: 53 நாள்: 25.01.2018

## <u>பத்திரிக்கை செய்தி</u>

புதுக்கோட்டை மாவட்டம்

## பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை

**கர்ப்பிணி பெண்களின் பதிவு கட்டாயம்:**

குழந்தையின் பிறப்பு சான்றிதழ் பெறுவதற்கு கர்ப்பிணிகளின் பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**கர்ப்பிணி பெண்கள் மற்றும் இளம் சிசு கண்காணிப்பு:**

பொது சுகாதாரத் துறையில் தாய்சேய் நலத் திட்டத்தின் கீழ் கர்ப்பிணி பெண்கள் பதிவு செய்யப்பட்டு அவர்களுக்கு அந்தந்த பகுதிகளில் உள்ள அரசு மருத்துவமனை, மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் மூலம் கர்ப்ப கால சேவைகள் வழங்கப்பட்டுவருகிறது.

இந்த பணியினை நகர்புற மற்றும் கிராம புற செவிலியர்கள் மேற்கொண்டு வருகின்றன. அவர்கள் தங்கள் பகுதிகளிலுள்ள கர்ப்பிணி பெண்களை ஆரம்ப நிலையிலேயே முதல் (மூன்று மாதங்களுக்குள்ளாக) பதிவு செய்து அவர்களை கர்ப்ப காலத்திலும், பிரசவித்தவுடன் தாய்சேய் இருவரையும் தொடர்ந்து கண்காணித்து பிக்மி (Pregnancy Infant Cohort Monitoring and Evaluation) என்ற மென்பொருளில் பதிவு செய்து ஒவ்வொரு கர்ப்பிணிக்கும் பன்னிரெண்டு இலக்க பேறு சார் குழந்தை நல அடையாள எண் (RCH ID) கணிணி மூலம் வழங்கப்பட்டுவருகிறது.

கர்ப்பிணி பெண்கள் ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கு சென்று அவர்கள் பெற்றிடும் கர்ப்ப கால பராமரிப்பு, தடுப்பூசி, ஆய்வகப் பரிசோதனை மற்றும் ஸ்கேன் பரிசோதனை குறித்த விவரங்கள் மென்பொருளில் பதிவு செய்யப்பட்டு வருகிறது. இதன் மூலம் கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றனர்.

கர்ப்பிணிகளின் விபரங்களை அந்தந்த கிராம சுகாதார செவிலியர்கள் குழந்தைகள் நல பதிவேட்டில் பதிவு செய்வதுடன் பிக்மி எனப்படும் இணைய தள மென்பொருளிலும் பதிவுசெய்து வருகின்றனர்.

பிக்மி அடையாள எண்ணை (RCH ID) அந்தந்த பகுதி கிராமப்புற மற்றும் நகர்ப்புற சுகாதார செவிலியர்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம். அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கர்ப்ப கால சேவை பெறும் போது, தங்கள் விவரங்களை

அங்குள்ள பிக்மி (PICME) மென்பொருள் மூலம் முன்பதிவு (PRE-REGISTRATION) செய்து பெற்றுக்கொள்ளலாம். பொது இ-சேவை மையங்கள் மற்றும் மருத்துவ உதவி எண் 102ஐ தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளலாம். மேலும் https://picme.tn.gov.in// picme _ public என்ற இணைய தளத்தில் பதிவு செய்து, தங்கள் பகுதியில் பணியாற்றிடும் கிராம சுகாதார செவிலியரிடம் 12 இலக்க அடையாள எண்ணை பெற்றுக்கொள்ளலாம்.

**பிறப்பு இறப்பு பதிவுகளுக்கு அனைத்து துறையினரும் பொது மென்பொருளை பயன்படுத்துதல்:**

வருவாய் துறை, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளில் பொது சுகாதாரத் துறையினரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பொது மென்பொருளை பயன்படுத்தி பிறப்பு இறப்பு பதிவு பணிகளை மேற்கொள்ளவேண்டும். இதன்மூலம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள், மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் இதர அரசு சார்புடைய மருத்துவமனைகள், தனியார் மருத்துவமனைகளில் நிகழ்வுறும் பிறப்பு இறப்பு நிகழ்வுகளை பொது மென்பொருள் மூலம் தங்கள் பகுதியின் பிறப்பு இறப்பு அறிக்கைகளை பதிவாளர்களுக்கு உடனுக்குடன் அனுப்பி வைக்க வேண்டும். இனிவரும் காலங்களில் குழந்தையின் பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்கு கர்ப்ப காலத்தில் கிராம சுகாதார செவிலிர்கள் மற்றும் நகர்ப்புற சுகாதார செவிலியர்கள் பதிவு செய்த 12 இலக்க பேறு சார்ந்த குழந்தை நல அடையாள எண் (**RCH ID**) விவரத்தை, பிரசவிக்கும் மருத்துவமனையில் அளித்தால் மட்டுமே பிறப்புச் சான்றிதழ் பெற இயலும்.

இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கர்ப்பிணிகளும் 100சதவீதம் பதிவு செய்யப்படுவதுடன் கர்ப்ப கால பராமரிப்பு வழங்கப்படுவதும் உறுதி செய்யப்படுகிறது. மகப்பேறு மற்றும் சிசு மரணங்களை வெகுவாகக் குறைப்பதற்கும், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவியினை பெறுவதற்கும், இந்த நடவடிக்கையினை பின்பற்றினால் மட்டுமே அடைய முடியும்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**